<u>செய்தி வெளியீடு</u>

<u>முன்னாள் படைவீரர்களின் கவனத்திற்கு</u>

பல்வேறு வங்கிகளில் காலியாகவுள்ள எழுத்தர் பணியிடங்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு மட்டும் 110 பணி காலியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஊனமுற்ற முன்னாள் படைவீரர்/சார்ந்தோர்களுக்கென 39 பணிகாலியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன. அந்த வங்கிகளது விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | கனரா வங்கி | 7. ஆந்திரா வங்கி |
| 2. | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா | 8. பேங்க் ஆப் இந்தியா |
| 3. | பஞ்சாப் நேசனல் வங்கி | 9. கார்ப்பரேசன் வங்கி |
| 4. | சிண்டிகேட் வங்கி | 10. டேனா வங்கி |
| 5. | யூனியன் பேங்க் ஆப் இந்தியா | 11. ஓரியண்டல் பேங்க் ஆப் இந்தியா |
| 6. | விஜயா வங்கி | 12. யுகோ வங்கி |

மேற்காணும் வங்கி பணியிடத்திற்கு விண்ணப்பிக்க கீழ்க்காணும் தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

1. கல்வித்தகுதி – அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். (அல்லது) இராணுவ படைப்பிரிவில் 15 வருடத்திற்கு குறையாமல் பணிபுரிந்திருத்தல் வேண்டும். கணணியில் சான்றிதழ் படிப்பு / பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு முடித்திருக்க வேண்டும். முன்னாள் படைவீரர்களை பொறுத்த வரை, இராணுவத்தில் 15 வருடங்களுக்குக் குறையாமல் பணிபுரிந்து 10–ம் வகுப்பு தேறிய முன்னாள் படைவீரர்கள் பட்டதாரியாகக் கருதப்படுவார்கள். பத்தாம் வகுப்பு தேறிய முன்னாள் படைவீரர்கள் Army Graduation Certificate சமர்ப்பித்தால் போதுமானது.

2. வயது 50 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

மேற்காணும் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி 12.09.2016.
இணையதள முகவரி – www.ibps.in

மேலும் விபரங்களுக்கு 20–26 தேதியிட்ட Employment Newsஐ பார்க்கவும். மேற்குறிப்பிட்ட தேர்வுக்கு கீழ்க்காணும் இடங்களில் Pre-Examination Training நடைபெறவுள்ளது.

1. சென்னை 2. கோயமுத்தூர் 3. மதுரை 4. திருச்சிராப்பள்ளி

எனவே தகுதியும், விருப்பமும் உள்ள முன்னாள் படைவீரர்கள் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு சேலம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் கேட்டுக் கொள்கிறார்.

உதவி இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நலன்,
சேலம் 636 001.